# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/30 - 2018 ජනවාරි මස 10 වැනි බදාදා - 2018.01.10

*2053/30 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், வட்டார இல. 03 இல் அமைந்துள்ளதும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லைக்குள்ளானதுமான கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணியானது இன்றிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தானது என இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ.),
பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17ஆம் மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுரூபாய",
பத்தரமுல்லை.
2018, சனவரி 05.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகரசபை எல்லைக்குட்பட்டதும், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகப் பிரிவினுள் வட்டார இல. 03 இன் வெலிகடை கிராமத்தில் அமைந்துள்ளதுமான காணியானது, நில அளவையாளரினால் 2008.06.27 இல் தயாரிக்கப்பட்டு பூர்வாங்க மாதிரிப்பட இல. 8943 இனைக் கொண்ட அக்காணியின் விஸ்தீரணமானது 0.3616 ஹெக்டெயார் (0ஏ. 3றூ . 22.96பேர்ச்சஸ்) ஆகும்.

காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு அமைந்துள்ளது :-

வடக்கு : கந்துருகஸ என்றழைக்கப்படும் உரிமைகோருபவர் தெரியாத காணி மற்றும் பூர்வாங்க மாதிரிப்பட இல. 8337 இன் காணித்துண்டு இல. 02 ;
கிழக்கு : பூர்வாங்க மாதிரிப்பட இல. 7801 இன் காணித்துண்டு இல. 01 ;
தெற்கு : ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை மற்றும் சீமெந்துக் கால்வாய் ;
மேற்கு : சீமெந்துக் கால்வாய் மற்றும் கந்துருகஸ என்றழைக்கப்படும் உரிமகோருபவர் தெரியாத காணி.

01- 699

1A - G 26922 — 08 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.